CPA

Centre for Policy Alternatives

විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# மரண தண்டனையை மீள அமுல்படுத்துவது தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கை

***ஜூன் 27, 2019, கொழும்பு, இலங்கை**: போதைப் பொருள் தொடர்பில் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் நால்வருக்கு மரண தண்டனை நிறைவேற்றும் ஆவணங்களில் கைச்சாத்திட்டுள்ளமை, அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை இரத்துச் செய்தல், உயிர்த்த ஞாயிறு தினக் குண்டு வெடிப்புகள் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவைக் கடுமையாகச் சாடியமை மற்றும் அரச சார்பற்ற ஸ்தாபனங்களை விமர்சித்தமை போன்ற ஏனைய விடயங்கள் தொடர்பாக ஜூன் 26, 2019 அன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் மேற்கொள்ளப்பட்ட கருத்துகளால் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) ஆழ்ந்த விசனம் அடைகிறது. ஜனநாயகம், ஆட்சி மற்றும் இலங்கையில் பாதுகாப்பு என்பவை மீது இவற்றின் தாக்கத்தைக் கவனத்தில் கொண்டு இக்கருத்துக்கள் அனைத்தின் மீதும் அவசரமான கவனயீர்ப்பு தேவைப்படுத்துகின்றன என்பதுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் குறிப்பான கருத்துக்கைளை எதிர்வரும் காலத்தில் பதிவு செய்யவுள்ளது. ஆயினும், தற்போதைய தருணத்தில், மிகவும் முக்கியமானதும் அவசரமானதுமான - நிறைவேற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள – மரணதண்டனையின் மீள அமுல்படுத்துதல் தொடர்பில் அது தன் கவனத்தைச் செலுத்துகின்றது.*

*மரண தண்டனையை மீளவும் அமுல்படுத்துதல் என்பது இலங்கையின் தசாப்தகால உள்நாட்டு மற்றும் சர்வதேச கொள்கை நடைமுறைகளுக்கு எதிரானது என்பதை ஆரம்பத்திலேயே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குறிப்பிட விரும்புகின்றது. 1976 இலிருந்து இலங்கை மெய்யான நடப்பின் படி, மரண தண்டனை தொடர்பில் ஒரு சட்ட ரீதியான இடைநிறுத்தலைத் தொடர்ந்து பேணி வருகிறது. யாருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும், அவர்கள் புரிந்ததாக காணப்பட்ட குற்றங்கள் எவை மற்றும் மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ள திகதி என்பவை குறித்தான எந்தத் தகவல்களும் பகிரங்கமாக வெளியிடப்படாமை என இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் இரகசியமான முறையும் மிகவும் கரிசனத்திற்குரியதாக உள்ளது.*

*மரண தண்டனையை மீளமுல்படுத்துதல், மரண தண்டனையை இல்லாதொழிப்பதற்கான ஒரு துரிதப்படுத்தப்பட்ட உலக நடைமுறைக்கு எதிரானதாகச் செல்கிறது. இலங்கையில் இறுதியாக மரண தண்டனை மேற்கொள்ளப்பட்ட 1976இலிருந்து, 87 நாடுகள் மரண தண்டனையை*

முழுவதிலுமாக இல்லாதொழித்துள்ளன என்பதுடன், இன்று உலக நாடுகளின் மூன்றிலிரண்டுக்கும் அதிகமான நாடுகள் மரண தண்டனையை சட்டம் அல்லது நடைமுறையிலிருந்து இல்லாதொழித்துள்ளன. மேலும், போதை தொடர்பான சமூகப் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதில் கடுமையான, தண்டிக்கும் ரீதியிலான நடவடிக்கைகள் பயனுறுதியற்றவை எனவும், பதிலுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் குற்றமயப்படுத்தாமை என்பவற்றைக் கடைப்பிடித்தலுக்கு இட்டுச் செல்லுவதற்கு, அதிகரித்தளவிவான சர்வதேச அங்கீகாரம் உள்ளது. அதனால், போதைப் பொருள் தொடர்பிலான குற்றங்களுக்கு மரண தண்டனையை மீளவும் அமுல்படுத்துவதானது பலமான சர்வதேச இணக்கங்கள் மத்தியில் இலங்கையை ஒரு அந்நியப்படுத்துவதாக அமையும்.

மரண தண்டனையை மேற்கொள்வதிலிருந்து விலகியிருப்பதற்கு சர்வதேசச் சட்டத்தின் கீழ் இலங்கை கடப்பாடு கொண்டுள்ளதென்பதையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவனத்தில் கொள்கிறது. உயிர் வாழ்வதற்கான உரிமையை வலியுறுத்துகின்றதும் மற்றும் மிகவும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மிகவும் தீவிரமான குற்றங்களுக்கு மட்டுமே மரணதண்டனையை விதிப்பதைக் குறிப்பிடும் இரண்டு சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் (UDHR) மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் (ICCPR) என்பவற்றுக்கு இலங்கை ஒரு கையொப்பதாரியாக உள்ளது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தை பொருள் கோடல் செய்யும், ஐ.நா. மனித உரிமைகள் சபை, போதைப் பொருள் குற்றம் ''மிகத் தீவிரமான குற்றங்கள்'' என்ற ஒரு தகுதிநிலையைத் திருப்தி செய்யமாட்டாது என மீண்டும், மீண்டும் நிலைநாட்டியுள்ளது. மேலும், மரண தண்டனையை உபயோகித்தல் தொடர்பிலான சட்டப்படியான இடைநிறுத்துதலிற்கு இலங்கை 2007, 2008, 2010, 2016 மற்றும் 2018இல் ஐ.நா. பொதுச் சபைத் தீர்மானங்களுக்காக வாக்களித்துள்ளது.

நேர்மையாகக் கருதின், ஒரு நாடு கொண்டிருப்பதற்கு விரும்பும் ஒரு சமுதாயத்தின் வகை பற்றி மரண தண்டனை பேசுகிறது. இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் அனைத்துப் பிரதான மதங்களுமே வன்முறையின்மை எனும் கோட்பாட்டில் அமைந்தவையாகக் காணப்பட்டுள்ளன. மரண தண்டனையின் மீளமுல்படுத்துதலென்பது இக்கோட்பாடுகளின் ஒரு தெளிவான மீறுதலாகும். குற்றங்களைப் புரிந்து மற்றும் அதற்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் கண்டிக்கப்பட வேண்டியதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஏற்றுக்கொள்ளும் வேளையில், ஒரு பூரணமான சட்ட முறைமையில் கூட தவறுகள் செய்யப்பட முடியுமென்பதையும் அது வலியுறுத்துகிறது. ஒரு குற்றவியல் தண்டனையாக மரண தண்டனையின் தனித்துவமான முக்கியத்துவம் அது மாற்றொணாத் தன்மையானது என்பதாகும். மரண தண்டனை விதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டவர்கள் பின்னைய சந்தர்ப்பங்களில், அவர்கள் சாட்டப்பட்ட குற்றங்களில் குற்றமற்றவர்களாகக் காணப்பட்ட எண்ணற்ற உதாரணங்கள் உலகெங்கிலும் இருந்தாக உள்ளது. அப்பாவி நபர்களுக்கு மரணங்களை ஏற்படுத்தும் சாத்தியம் ஒரு நாட்டின் மனச்சாட்சிக்கு ஒரு பெரும் சுமையாக அமையும்.

மரண தண்டனை மேற்கொள்ளும் திட்டத்தை உடனடியாக நிறுத்துவதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஜனாதிபதி சிறிசேனா அவர்களிடம்

கேட்டுக் கொள்கிறது. சட்டத்தின் ஆட்சி என்பதன் அடிப்படையிலான ஒரு அரசியலமைப்பு ஜனநாயகத்தில் தனியொரு நபர் அதிகாரத்தைக் கொண்டிருத்தலாகாது என்பதால், மரண தண்டனையை இரத்துச் செய்வதற்கான அவசரமான சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு இலங்கைப் நாடாளுமன்றத்தையும் நாம் கேட்டுக் கொள்கிறோம்.
இறுதியாக, மரண தண்டனை அமுல்படுத்துதலை பகிரங்கமாகக் கண்டிப்பதற்கும் மற்றும் அவசரமான சீர்திருத்தங்களின் தேவை தொடர்பாக கிளர்ந்து செயற்படுவதற்கும் சக பிரஜைகள் என்ற ரீதியில் மற்றையவர்களையும் நாம் அழைக்கிறோம்.